4. விதி 110-ன்கீழ் அறிக்கைகள்

(அ) ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் புதிய வகுப்பறைகள் கட்டுதல், பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளுதல் உள்ளிட்ட பள்ளிக் கல்வித் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *விதி 110-ன்கீழ் அறிக்கை அளிக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதி 110-ன்கீழ், அறிக்கையினை தங்களின் அனுமதியோடு இந்த அவையிலே அளிக்க விரும்புகிறேன்.*

தமிழ்நாட்டை வளமான, வலிமையான மாநிலமாக உருவாக்கிடவும், அனைத்துத் துறைகளிலும் முன்னணி மாநிலமாகத் திகழ்ந்திடச் செய்திடவும் நாள்தோறும் எண்ணற்ற மக்கள் நலன் சார்ந்த திட்டங்களை நமது தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருவதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். சமூகம், அரசியல், பொருளாதாரம், மக்கள் மேம்பாடு–அனைத்திலும் நவீனமயம் ஆகியவற்றைக் கொண்ட திராவிட மாடல் ஆட்சியை நடத்தி வருகிறோம்.

சுயமரியாதைக் கொள்கையில் தந்தை பெரியார், இனமான எழுச்சியில் பேரறிஞர் அண்ணா, நவீன தமிழகத்தைக் கட்டமைப்பதில் தமிழினத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர், மொழி உரிமையில் இனமானப் பேராசிரியர் ஆகியோரின் வழிநின்று, சமூக மேம்பாட்டிலும் தனிமனித வளர்ச்சியிலும் இந்த நாடு ஒருசேர வளர வேண்டும், அந்த வளர்ச்சி அனைத்துத் தரப்பினரின் நலனை முன்னிறுத்தியிருக்க வேண்டும் என்கிற அடிப்படையில் நாம் நாள்தோறும் திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறோம். இது தமிழகத்தை மேம்படுத்தும் என்பதையும் தாண்டி, இந்தியாவின் பல்வேறு மாநிலங்களால் உற்றுக் கவனிக்கப்பட்டு வருகிறது.

ஆட்சிப் பொறுப்பேற்ற நாள் முதல், தேர்தல் அறிக்கையில் தெரிவித்த வாக்குறுதிகளை நிறைவேற்றிடும் வகையிலான அறிவிப்புகளை மட்டுமல்லாமல், அறிவிக்காத பல

[திரு. மு.க. ஸ்டாலின்] [2022 அக்டோபர் 19

திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறோம் என்பதை இந்தப் பேரவை உறுப்பினர்களும், நாட்டு மக்களும் நன்கு அறிவார்கள். தேர்தல் அறிக்கையில் வெளியிடப்பட்ட வாக்குறுதிகளில், 2021–2022 மற்றும் 2022–2023 ஆம் நிதி ஆண்டுகளில் மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியைக் கருத்தில்கொண்டு,

- ஆளுநர் உரையில் 77 அறிவிப்புகள்,
- எனது செய்தி வெளியீட்டின் மூலமாக 150 அறிவிப்புகள்
- சட்டமன்றப் பேரவையில், விதி எண் 110–ன்கீழ் 60 அறிவிப்புகள்
- மாவட்ட ஆய்வுப் பயணங்களின்போது வெளியிட்ட 77 அறிவிப்புகள்
- எனது உரைகளின் வழியாக 46 அறிவிப்புகள்
- நிதிநிலை அறிக்கையில் 255 அறிவிப்புகள்
- வேளாண்மை நிதிநிலை அறிக்கையில் 237 அறிவிப்புகள்
- மாண்புமிகு அமைச்சர் பெருமக்களால் மானியக் கோரிக்கைகளின்போது வெளியிடப்பட்ட 2,425 அறிவிப்புகள்

என மொத்தம் 3,327 அறிவிப்புகள் நமது அரசால் இதுவரை வெளியிடப்பட்டுள்ளன (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இம்மாமன்றத்துக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த அறிவிப்புகளின் மீதான தொடர் நடவடிக்கைகள் கவனமாகக் கண்காணிக்கப்பட்டு, உரிய மேல் நடவடிக்கைகள் தொடரப்பட்டு வருகின்றன என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதன்படி வெளியிடப்பட்ட அறிவிப்புகளில், 78 விழுக்காடு அளவிலான அறிவிப்புகளுக்கு, அதாவது 2,607 அறிவிப்புகளுக்கு அரசாணைகள்/அறிவுரைகள் வெளியிடப்பட்டு, அவற்றில் 791 அறிவிப்புகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) தேர்தல் அறிக்கையில் சொல்லப்படாத வாக்குறுதிகளும்

2022 அக்டோபர் 19] [திரு. மு.க. ஸ்டாலின்]

நிறைவேற்றப்பட்டுள்ளன. 1,816 அறிவிப்புகள் தொடர்பான பணிகள் நடைபெற்று வருகின்றன. 666 அறிவிப்புகளுக்கு உரிய ஆணைகள் வெளியிட, தொடர்புடைய துறைகளால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 54 பணிகள் ஒன்றிய அரசின் பரிசீலனையில் உள்ளன என்பதை இந்த நேரத்தில் நான் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். இவ்வாறு பல்வேறு அறிவிப்புகளை மக்கள் நலன் கருதி வெளியிட்டு செயல்படுத்திவரக்கூடிய நிலையில், இன்றையதினம், பள்ளிக் கல்வித் துறை, நகராட்சி நிர்வாகத் துறை, போக்குவரத்துத் துறை, ஊரக வளர்ச்சித் துறை ஆகிய துறைகளின் சார்பில் இம்மாமன்றத்தில் சில அறிவிப்புகளை வெளியிட விரும்புகிறேன்.

முற்பகல் 11–45

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஓராண்டுக் காலத்தில் பள்ளிக் கல்வித் துறையானது மகத்தான பல திட்டங்களை முன்னெடுத்துள்ளது. இந்திய ஒன்றியத்தில் உள்ள அனைத்து மாநிலங்களுக்கும் எடுத்துக்காட்டாகத் திகழும் வண்ணம், காலை உணவுத் திட்டம், (மேசையைத் தட்டும் ஒலி) இல்லம் தேடிக் கல்வி, (மேசையைத் தட்டும் ஒலி) எண்ணும் எழுத்தும் திட்டம், மாதிரிப் பள்ளிகள், நான் முதல்வன், தகைசால் பள்ளிகள் என நமது அரசு பல்வேறு திட்டங்களைத் தீட்டி சிறப்பாகச் செயல்படுத்தி வருகின்றது.

இந்தச் சூழ்நிலையில், பள்ளிக் கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்துவதற்கென அரசுப் பள்ளிகளுக்கு சுமார் 26 ஆயிரம் புதிய வகுப்பறைகளும், 7 ஆயிரத்து 500 கிலோ மீட்டர் சுற்றுச்சுவரும், பராமரிப்புப் பணிகளுக்கென சுமார் 2 ஆயிரத்து 200 கோடி ரூபாய் நிதியும் என மொத்தம் சுமார் 12 ஆயிரத்து 300 கோடி ரூபாய் நிதி தேவை என்று கண்டறியப்பட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) அவற்றைப் படிப்படியாக ஏற்படுத்தித் தருவதற்கென 'பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டம்' என்னும் திட்டம் அறிவிக்கப்பட்டது. அத்திட்டத்தின்படி, நடப்பாண்டில் சுமார் 1,430 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு, ஆயத்த வேலைகள் நடைபெற்று வருகின்றன. தரமான கல்வியை நமது அரசுப் பள்ளிகள் வழங்கி வருவதால், கடந்த இரண்டு ஆண்டுகளில் சுமார் 15 இலட்சம் மாணவர்கள் அரசுப் பள்ளிகளில் கூடுதலாகச் சேர்ந்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

எனவே, அதிகரித்து வரும் மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப புதிய வகுப்பறைகளுக்கான தேவைகளும் உயர்ந்துள்ளதால், கூடுதலான வகுப்பறைகள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், ஊராட்சி ஒன்றியத் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கு சுமார் 800 கோடி மதிப்பீட்டில் 6 ஆயிரம் புதிய வகுப்பறைகளும், உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் சுமார் 250 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1,200 வகுப்பறைகளும் என மொத்தம் ஆயிரத்து 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 7 ஆயிரத்து 200 வகுப்பறைகள் நடப்பாண்டிலேயே கூடுதலாகக் கட்டப்படும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைப் பெருமகிழ்ச்சியோடு இம்மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

பள்ளிகளின் பராமரிப்புப் பணிகளுக்கென நடப்பாண்டில் ஏற்கெனவே ஒதுக்கப்பட்டுள்ள சுமார் 150 கோடி ரூபாய் நிதியுடன் சேர்த்து, தற்போது 115 கோடி ரூபாய் கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்பட்டு, அரசுப் பள்ளிகளை உரிய முறையில் பராமரிக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. இதனால் அரசுப் பள்ளிகளை நாடி வரும் மாணவர்களுக்குத் தரமான பள்ளிக் கட்டமைப்பு கிடைக்கப் பெறுவதுடன், பாதுகாப்பான கற்றல் சூழலும் உறுதி செய்யப்படும் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

(ஆ) பெருநகர சென்னை மாநகராட்சி, இதர மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளிலுள்ள பழுதடைந்த சாலைகளை மேம்படுத்துதல், பல்வேறு நிதி உதவித் திட்டங்களை ஒருங்கிணைத்தல் உள்ளிட்ட நகராட்சி நிர்வாகத் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிக்கை

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** அடுத்தபடியாக, நகர்ப்புரச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் குறித்து அறிவிப்பினை வெளியிட விரும்புகிறேன். தமிழ்நாட்டில் உள்ள 649 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில், மொத்தம் 55 ஆயிரத்து 567 கி.மீ. நீளமுள்ள சாலைகள் அமைந்துள்ளன. இவற்றில், 6 ஆயிரத்து 45 கி.மீ நீளமுள்ள சாலைகள் ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டுள்ள பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் மற்றும் குடிநீர் குழாய் பணிகள் போன்றவற்றால் சேதமடைந்துள்ளன. மேலும், 2016–2017 ஆம் ஆண்டிற்குப் பின்பு மேம்படுத்தப்படாமல் பழுதடைந்த நிலையில் பல்லாயிரக்கணக்கான கிலோ மீட்டர் நீளச் சாலைகள் உள்ளன.